***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No. 199/2022 – P.W. 6 (LW7)***

| | |
|---|---|
| *Name* | விஜேந்திரன் மருத்துவ அலுவலர்<br>திருச்சி அரசு மருத்துவமனை |
| *Father/Husband's Name* | |
| *Village* | |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *39* |

*1,2 வது* **எதிரிகள் ஆஜர். 3 வது எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 12.05.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் திருச்சி அரசு மருத்துவமனையில் மருத்துவ அலுவலராக உள்ளேன்.

கடந்த 27.06.2019 ம் தேதியன்று மன்னார்குடி அரசு தலைமை மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் அவசர சிகிச்சை மருத்துவராக பணிபுரிந்தபோது 43 வயது மதிக்கதக்க செந்தில் என்பவர் சேவற்கொடியான் என்பவரால் அழைத்துவரப்பட்டவரை விசாரித்தில் தன்னை தெரிந்த மூன்று நபர்கள் தாக்கியதாக கூறினார். இரவு சுமார் 11.00 மணியளவில் முக்குளம் சாத்தனூர் ரோடு இருச்சக்கர வாகனத்தில் வந்து பின்னால் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதித்தபோது தலையின் பின்புறம் கன்றிய காயமாக 4X3cm அளவில் இருந்தது. அவரை உள்நோயாளியாக அனுமதித்து விபத்து பதிவேடு பதிவு செய்து சிகிச்சை அளித்தேன். மேற்படி நபருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மையானது சொறபகாயம் என்று கருத்துரை வழங்கினேன். **மேற்படி விபத்து பதிவேடு உடன் இணைந்த காயச்சான்று அசா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நோயாளியை பரிசோதித்தபோது சுயநினைவுடன் இருந்தார் என்றால் சரிதான். நோயாளி காயத்தை பொறுத்தும், சம்பவம் இடம் குறித்தும், ஆயுதம் குறித்தும் என்ன விபரத்தை குறிப்பிடுகிறாரோ அதை தான் விபத்து பதிவேட்டில் குறித்து கொள்வது வழக்கம் என்றால் காயத்தை பார்த்து தான் குறிப்போம். மற்ற விபரங்கள் அவர் சொல்வதை குறித்து கொள்வோம். நோயாளி தாக்கிய தேதி குறித்து குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் தேதி சொல்லப்படவில்லை. சம்பவ இடத்தை பொறுத்து முக்குளம் சாத்தனூர் ரோடு என்று குறிப்பிட்டுள்ள நிலையில் Land Mark குறிப்பிட்டு சொல்லியுள்ளாரா என்றால் Land Mark சொல்லவில்லை.

27.06.2019 ம் தேதியன்று இரவு 11.00 மணிக்கு விபத்து பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். காயத்தில் எதுவும் இரத்த கசிவோ, வீக்கமோ இல்லை என்றால் சரிதான். கன்றிய காயம் என்பது சாதாரணமாக இடித்துக்கொண்டாலே ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான். நான் பார்த்த வகையில் நோயாளிக்கு இந்த ஒரு காயத்தை தவிர வேறு எந்த காயமும் இல்லை என்றால் சரிதான்.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi